செ.வெ.எண் -42 நாள்:22.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

## 23.02.2018 (ம) 24.02.2018 - அன்று நடைபெறவுள்ள கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடு/ செம்மறி ஆடுகளுக்கான "இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம்"

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.09.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில், தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் /செம்மறிஆடுகள் வீதம், 31 மாவட்டங்களில், 7,70,539 பயனாளிகளுக்கு, 30,82,156 வெள்ளாடுகள் /செம்மறி ஆடுகளும், தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில், 21 மாவட்டங்களில், 67,322 பயனாளிகளுக்கு 67,322 கறவைப் பசுக்களும் 2011-12 முதல் 2017-18 முடியவுள்ள ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் மேற்படி திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. 2011-12 ஆம் ஆண்டிற்கு 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும்,1906 பயனாளிகளுக்கு 7624 வெள்ளாடுகளும், 2012-13 ஆம் ஆண்டிற்கு 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும், 2593 பயனாளிகளுக்கு 10372 வெள்ளாடுகளும், 2013-14 ஆம் ஆண்டிற்கு 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும், 2770 பயனாளிகளுக்கு 11080 வெள்ளாடுகளும், 2014-15 ஆம் ஆண்டிற்கு 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும் 2690 பயனாளிகளுக்கு 10760 வெள்ளாடுகளும், 2015-16 ஆம் ஆண்டில் 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும் 2271 பயனாளிகளுக்கு 9084 வெள்ளாடுகளும், 2016-17 ஆம் ஆண்டில் 293 பயனாளிகளுக்கு 1172 வெள்ளாடுகளும், 2017-18 ஆம் ஆண்டில் 100 பயனாளிகளுக்கு 100 கறவை பசுக்களும், 2522 பயனாளிகளுக்கு 10088 வெள்ளாடுகளும், வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறிஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்கள். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு மேற்படி ஆண்டுகளில் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் 23.02.2018 மற்றும் 24.02.2018-அன்று கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு / செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறிஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.